ISSN:2582-9599

# சீவகசிந்தாமணியில் மலர்சார் படிமங்கள்

**முனைவர் மா.மலர் செல்வி, உதவிப் பேராசிரியர்,**

**தமிழ்த்துறை, டாக்டர் என்.ஜி.பி கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 641048**

**malarselvidhanam@gmail.com**

6

**ஆய்வுச்சுருக்கம் :**

தமிழ்க் காப்பியங்களை வளர்நிலை காப்பியங்கள்,கலைக் காப்பியங்கள் என இரண்டாகப் பகுப்பர்.வாய்மொழி மரபாக இருந்து ஒரு குறிப்பிட்ட படிநிலை வளர்ச்சியில் செவ்வியல் தன்மையோடு படைக்கப்படுவது வளர்நிலை காப்பியம் எனலாம்.புதிதாகப் படைப்பது கலைக்காப்பிய வகையில்

அடங்கும்.திருத்தக்க தேவரால் படைக்கப்பட்ட சீவகசிந்தாமணி காப்பியத்தை கலைக்காப்பியம் என்பதை விட இயற்கைக் காப்பியம் என்று அழைப்பது சிறப்பானதாகும். முல்லைமலர், குவளை மலர், காந்தள் மலர், நெருஞ்சி மலர், தாமரை மலர் போன்ற மலர்களை தேவர் மனித வாழ்வோடு இணைத்து மானுடத்தின் விழுமியங்களை எடுத்துரைத்துள்ளார்.இயற்கை படிமங்களுக்கு சீவகசிந்தாமணியில் மரபுசார் உவமைகளைக் கையாண்டு விளக்கியுள்ளார்.

**ஆய்வு நோக்கம்:**

மனித வாழ்வியலைச் செம்மைப்படுத்த எழுந்தக் காப்பியமாக, சீவகசிந்தாமணி விளங்குகின்றது. மனிதன் காப்பியத்தில் முன்னிலை பெறுகின்றான். இயற்கை மனிதனுக்கு அரணாகத் திகழ்கின்றது. இயற்கைக்காட்சி எனும் கருவியின் துணைகொண்டு, மனித உணர்வுகளை மையமிட்டு காப்பியம் பயணிக்கின்றது என்று கூறலாம்.இயற்கையோடு இணைந்த வாழ்வியலை திருத்தக்க தேவர் போற்றிப் பாடி, படிமப்படுத்தியுள்ளார். அவ்வகையில் அமைந்த இயற்கையான ஒப்பற்ற மலர்சார் படிமங்களை தேவர் படிமப்படுத்தியுள்ள பாங்கினை விளக்குவதே ஆய்வின் நோக்கமாகும்.

தமிழ்க் காப்பியங்களை வளர்நிலை காப்பியங்கள்,கலைக் காப்பியங்கள் என இரண்டாகப் பகுப்பர்.வாய்மொழி மரபாக இருந்து ஒரு குறிப்பிட்ட படிநிலை வளர்ச்சியில் செவ்வியல் தன்மையோடு படைக்கப்படுவது வளர்நிலை காப்பியம் எனலாம்.புதிதாகப் படைப்பது கலைக்காப்பிய வகையில் அடங்கும்.திருத்தக்க தேவரால் படைக்கப்பட்ட சீவகசிந்தாமணி காப்பியத்தை கலைக்காப்பியம் என்பதை விட 'இயற்கைக் காப்பியம்' என்று அழைப்பது சிறப்பானதாகும்.

மனித வாழ்வியலைச் செம்மைப்படுத்த எழுந்தக் காப்பியமாக, சீவகசிந்தாமணி விளங்குகின்றது. மனிதன் காப்பியத்தில் முன்னிலை பெறுகின்றான். இயற்கை மனிதனுக்கு அரணாகத் திகழ்கின்றது. இயற்கைக்காட்சி எனும் கருவியின் துணைகொண்டு, மனித உணர்வுகளை மையமிட்டு காப்பியம் பயணிக்கின்றது என்று கூறலாம்.இயற்கையோடு இணைந்த வாழ்வியலை திருத்தக்க தேவர் போற்றிப் பாடி, படிமப்படுத்தியுள்ளார். அவ்வகையில் அமைந்த இயற்கையான ஒப்பற்ற மலர்சார் படிமங்களை

தேவர் படிமப்படுத்தியுள்ள பாங்கினை விளக்குவதே கட்டுரையின் நோக்கமாகும்.

**மலர்சார் படிமங்கள்**

முல்லைமலர், குவளை மலர், காந்தள் மலர், நெருஞ்சி மலர், தாமரை மலர் போன்ற பல்வகை மலர்களைத் திருத்தக்கதேவர் அழகுற இயற்கைசார் படிமமாக அமைந்துக் காட்டுகிறார்.

**முல்லை மலர்சார் படிமங்கள்**

முல்லை மலர் வெண்மையானது. வெண்மை தூய்மையைப் பறைசாற்றுவதாகும். தமிழ் இலக்கியங்களில் முல்லை மலர் பெண்களின் கற்புக்குப் படிமமாய் மிளர்வதாகும். இத்தன்மையை விளக்கவே திருத்தக்கத்தேவர் பதுமையார். இலம்பகத்தில் முல்லை. மலர்க்கொடியை மகளிரது வடிவத்திற்குப் படிமமாகப் படைத்துக் காட்டினார் போலும், சித்திரகூட மலைப் பகுதியைச் சீவகன் அடைகின்றான். அம்மலையில் முனிவர்கள் வாழும் தவப்பள்ளிகள் உள்ளன. தவப் பள்ளியில் காணப்பட்ட இயற்கை அழகை, பெண்மையுடன் இணைத்துப் பேரழகு வாய்ந்ததாகத் தேவர் கூறியுள்ளார்.

"வருந்து நீர்மை அம் மாதவர் பள்ளியுள்
குருந்தம் ஏறிய கூர்அரும் பார்முல்லை.
பொருந்து கேள்வரைப் புல்லிய பொன்னனார்
மருங்கு போன்றருளி மாக்கவின் கொண்டதே" **(சீவகசிந்தாமணி, பது,இல.பா.எ.1195)**

முல்லை மலர்க் கொடியைக் கற்புடைய அழகிய மகளிருக்குப் படிமமாக எடுத்துக் காட்டுவது சித்திரத்தை ஒத்ததாகும். முல்லை மலர்க்கொடி தன் மென்மைத் தன்மையாலும் மகளிருக்கு இயற்கைப் படிமமாக அமைவது சிறப்பாகும். தவ முனிவர்களுக்குத் தூய வெண்மனம் அணியாக விளங்குவது போல் பெண்களுக்குக் கற்பே இயற்கைப் பேரழகு தருவதாகும் எனப்' படிமப் பாங்குடன் எடுத்துரைத்த விதம் சிறப்புடையது.

வெண்ணிற மழையின் மின்னல் போல் வெண் துயில் கலாபம் வீக்கி.. பண்நிறச் சுரும்பு குழும் பணி முல்லை சூட்டு வேய்ந்தார்." **(சீவகசிந்தாமணி, காந்த.இல. பா.எ.624)**

வெண்முகிலில் தோன்றுகின்று மின்னையபே வொண்மையான ஆடையிலே கூந்தலை இறுக்கமாகக் கட்டினர். இனிய இசையும் அழகிய நிறத்தையம் உடைய வண்டுகள் பொய்க்கும் முல்லை மலர்களைக் கற்பின் அடையாளமாகத் தலையில் சூட்டினார்கள் எனற தந்தையார் இலம்பகத்திலும் முல்லை மலர்கர்காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. குணமாலை முல்லைமலர் சூடியதை பாடல் 1064 எடுத்துரைக்கின்றது.

"கரும்பும் தேனும் அமிழ்தம்பானும் கலந்த நீஞ்சொல் மடவாட்க்கு அரும்பும் இலையும் மயக்கி ஆய்ந்த முல்லைச் சூட்டு.." **(சீவகசிந்தாமணி, இலக் இல, பா.1:2438)**

கரும்பும் தேனும் அமிழ்தும் பாலும் கலந்து இனிய மொழி பேசும் இலக்கணைக்கு முல்லை மலரைத் தலையில் குட்டினர்கள் என இலக்கணையார் இலம்பசுற்றிலும் கற்புப் படிமம் கையாளப்பட்டுள்ளது.

“முல்லை முகை சொரிந்தாற் போன்றினிய பாலடிசில்..." **(சீவகசிந்தாமணி, முத்தி-இல், பா.எ.2623)**

முல்லை அரும்பை குவித்து வைத்தாற் போன்ற இனிய பால் சோறு என்று இப்பாடலில் நாமாக பால்

அடிசிலைப் படிமப் படுத்தியுள்ளார் ஆசிரியர், மேற்காணும் முக்தி இலம்பகம் பாடலில் முல்லை மலரை அரிசிப் படிமமாகவும் மொழித்த நயம் மிகச் சிறப்பானது. காப்பியத்தில் தேவர். சீவசுன் தேவியரை முல்லை மலர் சூடிய தற்புர் செல்வியராகப் படிமப்படுத்தி பெண்மையைப் போற்றும் சிறந்த தலைவியராக காட்சிப்படுத்தியுள்ளார்.

"முல்லை சான்ற கற்பின் மெல்லியல் குறுமகள்" **மலர்சார் படிமங்கள்**

முல்லைமலர், குவளை மலர், காந்தள் மலர், நெருஞ்சி மலர், தாமரை மலர் போன்ற பல்வகை மலர்களைத் திருத்தக்கதேவர் அழகுற இயற்கைசார் படிமமாக அமைந்துக் காட்டுகிறார்.

முல்லை மலர்சார் படிமங்கள் முல்லை மலர் வெண்மையானது. வெண்மை தூய்மையைப் பறைசாற்றுவதாகும். தமிழ் இலக்கியங்களில் முல்லை மலர் பெண்களின் கற்புக்குப் படிமமாய் மிளர்வதாகும். இத்தன்மையை விளக்கவே திருத்தக்கத்தேவர் பதுமையார். இலம்பகத்தில் முல்லை. மலர்க்கொடியை மகளிரது வடிவத்திற்குப் படிமமாகப் படைத்துக் காட்டினார் போலும், சித்திரகூட மலைப் பகுதியைச் சீவகன் அடைகின்றான். அம்மலையில் முனிவர்கள் வாழும் தவப்பள்ளிகள் உள்ளன. தவப் பள்ளியில் காணப்பட்ட இயற்கை அழகை, பெண்மையுடன் இணைத்துப் பேரழகு வாய்ந்ததாகத் தேவர் கூறியுள்ளார்.

**"வருந்து நீர்மை அம் மாதவர் பள்ளியுள்**
**குருந்தம் ஏறிய கூர்அரும் பார்முல்லை.**
**பொருந்து கேள்வரைப் புல்லிய பொன்னனார்**
**மருங்கு போன்றருளி மாக்கவின் கொண்டதே"**

(சீவகசிந்தாமணி, பதுமையார்,இலம்பகம் பாடல் எண் 1195)

முல்லை மலர்க் கொடியைக் கற்புடைய அழகிய மகளிருக்குப் படிமமாக எடுத்துக் காட்டுவது சித்திரத்தை ஒத்ததாகும். முல்லை மலர்க்கொடி தன் மென்மைத் தன்மையாலும் மகளிருக்கு இயற்கைப் படிமமாக அமைவது சிறப்பாகும். தவ முனிவர்களுக்குத் தூய வெண்மனம் அணியாக விளங்குவது போல் பெண்களுக்குக் கற்பே இயற்கைப் பேரழகு தருவதாகும் எனப்' படிமப் பாங்குடன் எடுத்துரைத்த விதம் சிறப்படையது. வெண்ணிற மழையின் மின்னல் போல் வெண் துயில் கலாபம் வீக்கி.. பண்நிறச் சுரும்பு குழும் பணி முல்லை சூட்டு வேய்ந்தார்."

(சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையார் .இலம்பகம் பாடல் எண் 624)

வெண்முகிலில் தோன்றுகின்று மின்னையபே வொண்மையான ஆடையிலே கூந்தலை இறுக்கமாகக் கட்டினர். இனிய இசையும் அழகிய நிறத்தையம் உடைய வண்டுகள் பொய்க்கும் முல்லை மலர்களைக் கற்பின் அடையாளமாகத் தலையில் சூட்டினார்கள் எனற தந்தையார் இலம்பகத்திலும் முல்லை மலர்கர்காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. குணமாலை முல்லைமலர் சூடியதை பாடல் 1064 எடுத்துரைக்கின்றது.

"கரும்பும் தேனும் அமிழ்தம்பானும் கலந்த நீஞ்சொல் மடவாட்க்கு அரும்பும் இலையும் மயக்கி ஆய்ந்த முல்லைச் சூட்டு.." (சீவகசிந்தாமணி, இலக்கணையார் இலம்பகம், பாடல் எண் 2438)

கரும்பும் தேனும் அமிழ்தும் பாலும் கலந்து இனிய மொழி பேசும் இலக்கணைக்கு முல்லை மலரைத்

தலையில் குட்டினர்கள் என இலக்கணையார் இலம்பசுற்றிலும் கற்புப் படிமம் கையாளப்பட்டுள்ளது.

"முல்லை முகை சொரிந்தாற் போன்றினிய பாலடிசில்..."

(சீவகசிந்தாமணி, முக்தி இலம்பகம், பாடல் எண் 2623)

முல்லை அரும்பை குவித்து வைத்தாற் போன்ற இனிய பால் சோறு என்று இப்பாடலில் நாமாக பால் அடிசிலைப் படிமப் படுத்தியுள்ளார் ஆசிரியர், மேற்காணும் முக்தி இலம்பகம் பாடலில் முல்லை மலரை அரிசிப் படிமமாகவும் மொழித்த நயம் மிகச் சிறப்பானது. காப்பியத்தில் தேவர். சீவசுன் தேவியரை முல்லை மலர் சூடிய கற்புசார் செல்வியராகப் படிமப்படுத்தி பெண்மையைப் போற்றும் சிறந்த தலைவியராக காட்சிப்படுத்தியுள்ளார்.

"முல்லை சான்ற கற்பின் மெல்லியல் குறுமகள்" (நற்றிணை. பாடல் எண் 142)

எனச் சங்க இலக்கியமான நற்றினையில் முல்லை மலர் கற்புசார் படிமமாகவே இடம்பெற்றுள்ளது.

காந்தள் மலர்சார் படிமங்கள்

"கைமலர்த் தயை காந்தள் கடிமலர் நாறு கானம்"

(சீவகசிந்தாமணி, பதுமையார் இலம்பகம், பாடல் எண் 1214)

இப்பாடலில் கானகத்தில் மலர்ந்த காந்தள் மலர்கள் கையை விரித்து வைத்தது போல் இருந்தன என உவமையுடன் கூறி, திருத்தக்கதேவர்' காந்தள் மலர்களைக் கண்முன் படிமமாகக் காட்சிப்படுத்துகின்றார். பட்டினப்பாலையும் இதனை,

"ஓங்குவரை மருங்கின் நான்தாது உறைக்கும்
காந்தள் அம் துடுப்பின் கவிகுலை அன்ன
செறி தொடி முன்கைகூப்பி" (பட்டினப்பாலை, பாடல் அடி 152-154)

மொழிகின்றது பட்டினப்பாமல் காந்தன் மலர்களை மகனீர் கையுடன் இணைத்துப் படிமமாகி கூறுகின்றது.

குவளை மலர்சார் படிமங்கள்

குவளை மலரினைத் தேவர் பெண்களின் கண்களுக்குப் படிமப்படுத்தியுள்ளார்.

"கண்ணெனக் குவளையும் கட்டல் ஓம்பினார்
வண்ணவாள் முகமென மரையி னுள்புகள்
பண்ணெழுத்து இயல்படப் பரப்பி இட்டனர்.
தணிவயல் உழவர்தம் தன்மை இன்னதே" (சீவகசிந்தாமணி, நாமகள் இலம்பகம், பாடல் எண் 51)

என்ற இப்பாடலில் தேவர் உழவர்கள் வயலில் மலர்ந்துள்ள குவளை மலர்களை, தங்கள் காதலியின் கண் எனவும், தாமரை மலர்களை அவர்களின் முகம் எனவும் நினைத்து அவற்றைப் பறிக்காமல் செல்வதாக நயமாகக் காட்டிப் படிமப்படுத்தும் பாங்கு நினைந்து இன்புறத்தக்ளது. குவளைமலர், காப்பியத்தில் பெண்களின் கண்களுக்குக் படிமமாகத் திகழ்கின்றது.

தாமரை மலர்சார் படிமங்கள்

**தாமரை மலர்தலை யடுத்துத் தண்கமழ்**
**தூமலர்க் குவளைகா லணைத்துத் தோலடிக்**

**காமரு பெடைதழீடு அன்னங் கண்படும்**

**தேமலர்த் தடத்தழீஇத் திசைகள் மல்கின்றே.**

(சீவகசிந்தாமணி, கனகமாலையார் இலம்பகம், பாடல் எண் 1615)

தாமரை மலரைத் தலையணையாகக் கொண்டும் நல்ல அழகிய மணமுடைய தூய்மையான குவளை மலர்களைக் காலணையாகக் கொண்டும் விளங்கிய மத்திய நாட்டில் எழும்பில்லாத தோலால் ஆன அடியை உடைய பெண் அன்னப்பறவைகளைத் தழுவியபடி ஆண் அன்னப்பறவைகள் கண்றைங்குகின்ற மலர்ப் பொய்கைகள் திசைதோறும் நிறைத்து காணப்படுகின்றன என்று மத்திம நாட்டுப் பொய்கைகளில் தாமரை மலர்கள் மர்ந்து நிறைந்திருப்பது காட்சிப் படிமமாய் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**நெருஞ்சி மலர்சார் படிமங்கள்**

“வாள்அரம் துடைத்த வைவேல் இரண்டுடன் மலைந்த வேபோல் ஆள்வழக்கு ஒழிய நீண்ட அணிமலர்த் தடங்கள் எல்லாம் நீள்சுடர் நெறியை நோக்கும்நிரை இதழ் நெருஞ்சிப் பூப்போல்

காளைதன் தேர்செல் வீதி கலந்துடன் தொக்கதுஅன்றே.

(சீவகசிந்தாமணி, கோவிந்தையார் இலம்பகம், பாடல் எண் 461)

வானால் அரத்தால் அராவிய கூர்மையான இரண்டு வேல்கள் தம்முள் போரிட்டுக் கொள்னை போல ஆடவர் தலம் அழிய நோக்குகின்ற நீண்ட அழகிய மலர்போன்ற கண்கள் எல்லாம் ஞாயிறு செல்லும் வழியையேப் பார்த்திருக்கும் பெரிய நெருஞ்சி மலர்களைப் போல் சிவகன் தேர் செல்லும் தெருக்களிலேயே கொடுமை செய்ய இயலாது தம்மில் கலந்து சேர நெருங்கின எனத் தேவர் தெருஞ்சி மலர்களைப் பெண்களின் கண்களுக்குப் படிமமாக்குவது. அபூர்வமானது, நெருஞ்சி மலர் உவமையே இக்காட்சிப்படிமத்திற்கு உயிர்ப்புத் தருகின்றது. ஏனெனில் நெருஞ்சிப் பூவின் தன்மை இங்கு மகளிர் கண்களின் செயலுக்கு உவமையாக விளங்குகின்றது.

நெருஞ்சி மலர் கூட்டம் கூட்டமாக நிலம் விரியக்கூடியது. மேலும் ஞாயிறு போகும் திசைநோக்கி, அதற்கு இயைய, திரும்பி நோக்கும் இயல்புடையது. இப்பாடலில் சீவகன் ஞாயிறு ஆகவும் பெண்கள் அவனைக் காண, தெருவெல்லம் நிறைந்திருக்கும் நிலையை நெருஞ்சிப்பூ 'போல நிலன் நிறைந்திருப்பதாகவும் அவன் செல்லும் திசையெல்லாம் அவர்களின் கண்கள் நோக்கும் தன்மைக்கு ஞாயிறு போகும் நெறியைப் பார்க்கும் நெருஞ்சிமலர் போன்ற கண்கள் என நயமாகத் தேவர் மொழிந்திருப்பது அவரின் செம்மாந்த அறிவிற்கு சிறந்தச் சான்றாகும்.வேறு எந்த மலரும் இங்கு அந்தப் பொருளை அளித்திருக்காது.

"கோடுதையாக குடிசியோடு அரம்கொளக் குயற்றிய
ஓடு தேர்க்கால் மலர்ந்தன வகுளம் உயர்சண்பகம்
கூடு கோழிக்கொழுமுள் அரும்பின அம்கோசிக
ஆடைபூத்தன பாதிரி வெண்கடம்பு பந்தணிந்தவே"

(சீவகசிந்தாமணி, கனகமாலையார் இலம்பகம், பாடல் எண் 1650)

எனப் படிமமாகப் பாடியுள்ளார்.

தேவர், காப்பியத்தில் நீலமலர்கள், மராமரமலர்கள், நாகமலர்கள், கோங்கமலர்கள், வேங்கை மலர்கள், அரக்காம்பூல் மலர்கள், சண்பகமலர்கள், குறிஞ்சி மலர்கள், தாமரை மலர்கள், காயாம்

மலர்கள், கடம்புமலர்கள் பற்றிய குறிப்புகள் ஆங்காங்கே பரவிக் காணப்படுகின்றன. “கலவ மாமியல் எருத்தின கடிமலர் அவிழ்ந்தன காயா

உலக மன்னவன் திருநாள் ஒளிமுடி அணிந்துநின் றவர்போல்

பலவும் பூத்தன கோங்கம் பைந்துகில் முடியணிந் தவர்மின்

உலவு காந்சுகி யவர்போல் பூத்தன மரவமங் கொருங்கே"

(சீவகசிந்தாமணி, கனகமாலையார் இலம்பகம், பாடல் எண் 1558)

"கருநனைக் காயாகணமயில் அவிழவும்" (சிறுபா, பாடல் அடி.165)

என்று மலர்கள் படிமப்படுத்தப்படுகின்றது.தோகையுடைய மயிலின் கழுத்தைப் போலக் காயாம்பூ மரத வண்ணத்தைச் சிறுபாணாற்றுப்படை இவ்விதமே மலர்கள் மலர்ந்திருந்தன. கோங்க மலர்கள் எல்லாம் பேரரசன் முடிசூட்டு விழா நாளில், அவன் முன் முடிச் சேளிக்கும் மன்னர்கள் போலப் புத்துக் கிடந்தன; இவ்வகை மலர்களையெல்லாம் கனகமாலையார் இலம்பகத்தில் எதற்காகத் தேவர் படிமப்படுத்துகின்றார்? உற்றுநோக்கின், சீவகள் கனகமாலைக்கு காதல் நாநுதனுடய வேண்டி தொடுக்கப்பட்ட பூமாலையில் இவ்வரிய அழகிய மணிகளையே பயன்படுத்தியுள்ளமை அறியலாகின்றது. நேவர் ஒவ்வொரு இயற்கைப் படிமத்தைக் காப்பியப் போக்கிற்கு ஏற்புடையவண்ணம் காப்பிய மாந்தர்களுடன் தொடர்புபடுத்தியே படிமமாய் தந்துள்ளவிதம் போற்றுதற்குரியது.

**முடிவு**

இயற்கைத் துணையாகக் கொண்டு தேவர் மானுட அறம் பாடுகின்றார்.மானுட அறத்தை தழைக்கச் செய்வது கவிஞனின் தலையாய அறமாகும்.

இயற்கையைப் பாடிய பல்வேறு சங்கப் புலவர்களின் தொடர்ச்சியாக திருத்தக்கதேவரை இணைத்துக் கொள்ளலாம்.ஏனெனில் இயற்கைசார் படிமங்களுக்கு தேவர் மரபு சார்ந்த உவமைகளையும் வளம் பொதிந்த புதிய உண்மைகளையும் பயன்படுத்தி காப்பியத்தை ஓர் ஒப்பற்ற இயற்கைப் படிம ஓவியமாகப் படைத்து அளித்துள்ளார்.

**பார்வை நூல்கள்**

1.சீவகசிந்தாமணி விளக்கவுரை - துரை. இராசாரம் (உரையாசிரியர்)

2.சீவகசிந்தாமணி ஆராய்ச்சி- ஔவை சு. துரைசாமி பிள்ளை

3.இலக்கியத்தில் தொல்படிவங்கள்- க. பஞ்சாங்கம்

4.சங்க இலக்கியத்தில் புதுக்கவிதை கூறுகள்-பொன்மணி வைரமுத்து

5.பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை- மு.வரதராசன்

6.புதுக்கவிதைகளில் படிமங்கள்- ந. முருகேசன்

7.இலக்கியத்தில் படிமம்- வெ.இரா. சத்தியமூர்த்தி